**அ.சா.8 ரூகன் த/பெ. பெருமாள்** வயது. 34

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:– (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**</u>

எனது புலன் விசாரணையின் படி அ.சா.2–ஐ தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் சத்தம் கேட்டு சம்பவயிடம் வந்த சாட்சிகள் என்றால் சரிதான். 2ம் எதிரியின் மனைவி சிவகாமி வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதை என்னுடைய விசாரிணையில் தெரிந்து கொண்டேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. சிவகாமிக்கும் புகார்தாரருக்கும் ஏற்பட்ட வாய் தகராறு குறித்து நான் விசாரித்தேனா என்றால் அவர் இல்லாததால் விசாரிக்கவில்லை. அவருக்கு அறிவிப்பு எதுவும் வழங்கவில்லை. சிவகாமியை அவமானப்படுத்தியதற்காக நான் விசாரித்து வழக்கு ஏதேனும் பதிவு செய்தேனா என்றால் அவர் தலைமறைவாக இருந்தார். சிவகாமியின் பெயரில் எந்த புகாரும், குற்ற வழக்கும் இல்லை என்றால் சரிதான். அதனால் அவர் தலைமறைவாக இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, தலைமறைவாகத் தான் இருந்தார். அவ்வாறு புகாரை பெற்று விசாரித்து இருந்தால் அதில் வழக்கு பதிவு செய்ய வேண்டி இருக்கும் என்பதாலும், இந்த வழக்கை பதிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என்பதாலும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. காயச்சான்றில் பாதிக்கப்பட்டவர் எந்த தேதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை முடித்து வீட்டிற்கு சென்றார் என்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல, 02.04.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக உள்ளது, மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார், Discharge தேதி குறிப்பிடப்படவில்லை. சாட்சி குமுதா குறுக்கு விசாரணையின் போது தனது மகனுடன் 20 நாட்கள் சிகிச்சையின் போது உடன் இருந்ததாக கூறியுள்ள போது வழக்கு சொத்து அவரால் எடுத்துக் கொடுத்து நான் கைப்பற்றியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகளான தருமன் மற்றும் முரளி

எனது புலன் விசாரணையின்போது, சம்பவத்தை நேரடியாகப்பார்த்ததாக கூறவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் அ.சா.1–ன் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான், அங்கு சுற்றுவட்டத்தில் உள்ள அனைவருமே உறவினர்கள் தான். சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது இதற்கு முன்பாக எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரிந்தவரையில் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், அ.சா.1 பேருந்து ஓட்டுநர் என்பதால் அவருக்கு வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து அளிக்கப்பட்ட தவறான புகாரின் அடிப்படையில் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அதனால்தான் காயச் சான்றிதழிலும் அவரை யார் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல, விபத்துப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>மறுவிசாரணை:– இல்லை</u>

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,

Tirupathur.